**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

# OS. No. 175/2022

**03.03.2026**

## D.W.2- மீனாட்சிசுந்தரம்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

வாதிகள், பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்த வழக்கு விவரம் தெரியும். வாதிகள் எனது சித்தப்பா பிள்ளைகள் என்றால் சரிதான். பிச்சை, கருத்தக்கண்ண் ஆகியோர்கள் எனது தாத்தாவின் வாரிசுகள் என்றால் சரிதான். தேவி, உமாதேவி, பிரபு, சோனியா ஆகியோர்கள் கருத்தக்கண்ணனுக்கு வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படியார்கள் இந்த வழக்கின் பிரதிவாதிகள் என்றால் சரிதான். தேனம்மாள், கருத்தக்கண்ணனிடம் தாவா சொத்தை 09.04.2002ம் தேதியில் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். கிரையம் பெறும்போது பிரபுவுக்கு 19 வயது என்பதை மறைத்து வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் கருத்தக்கண்ணன் எனது அப்பாவுக்கு கிரையம் எழுதிக்கொடுத்தது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் பூர்வீக சொத்தில் பாகமாக கிடைத்தது என்று வாசகம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அது தவறு. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் எனக்கும், எனது அண்ணனுக்கும் எனது தாத்தா பேயாண்டித்தேவர் தானசெட்டில்மென்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் பூர்வீக சொத்து என குறிபிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அது தவறு, அது அவருடைய சுயசம்பாத்திய சொத்தாகும். பி.வா.சா.ஆ.4 ஆவணம் பட்டா எண்.3085ல் 5 நபர்களின் பெயரில் கூட்டுப்பட்டா உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ,5 ஆவணத்தில் 7 நபர்களின் பெயரில் கூட்டுப்பட்டா உள்ளது என்றால் சரிதான். அதில் எனது பெயரும், வாதிகள் பெயரும் இடம்பெற்றுள்ளது என்றால் சரிதான். எனது தாத்தா பேயாண்டித்தேவர் கிரையம் பெற்றதற்கான கிரைய ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கருத்தக்கண்ணனுக்கு கிடைக்கும் பாகத்தில் வாதிகளுக்கு 2/10 பாகம் பங்கு

கிடைக்கத்தக்கது என்றால் கருத்தக்கண்ணன் பாகத்தை விற்றுவிட்டார். கருத்தக்கண்ணன் வாதிகளின் பாகத்தை விற்றது செல்லாது என்றால் சரியல்ல. மேற்படி பாகப்பிரிவினை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது அல்ல என்றால் சரிதான். வாதிகள் கோரிய பாகம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.03 17:56:14 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.